# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 18/மா/2023**
**நாள் : 28.02.2023**

திரு. S. சத்தியநாராயணன்,
சென்னை– 97. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம் (OMR), பிள்ளையார் கோவில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.சத்தியநாராயணன் என்பவரின் 17.01.2023 நாளிட்ட மனு 23.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 18/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மேட்டுக்குப்பம் (OMR), பிள்ளையார் கோவில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. சத்தியநாராயணன் என்பவரின் 17.01.2023 நாளிட்ட மனுவில்,

"On 01.12.2018 I sent a complaint to the said respondents, regarding the illegally constructed commercial building at No.3/185, Rajiv Gandhi Salai, OMR, Mettukuppam, Chennai 600 097 which is built in Violation of the provisions of laws and for illegal encroachment of the service road and no proper parking facilities and etc., Further I have sent an inaction request dated 25.01.2019 on my complaint dated 01.12.2018.

I received a copy of a letter from the Member Secretary, dated 25.01.2019 vide Letter No.EC/S-I/21719/2018 which was forwarded to the 1st and 3rd Respondents that "to take necessary action against the construction under reference exercising the powers delegated by CMDA and also as per the MCMC Act 1919".

As a follow-up, I sent an action request to the 1st and 3rd Respondents on 12.05.2021 based on a letter I received from Member Secretary. However, as of today, no action has been taken on the said illegal building which is causing inconvenience to the general public.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 15ன் மண்டல அலுவலர் (ம) செயற் பொறியாளர் ஆகியோரிடம் 25.01.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலர் 14.02.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடமானது சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடம் என தெரிய வருகிறது. மேற்படி புகார் தொடர்பாக கதவு எண்.3/185 ராஜுவ் காந்தி சாலை, மேட்டுக்குப்பம், சென்னை-97 உள்ள இக்கட்டிடத்தின் உரிமையாளருக்கு NOTICE CALLING FOR APPROVED PLAN –தாக்கீது 13.02.2023 அன்று வழங்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 15 நாட்கள் கால அவகாசத்திற்கு பிறகு Lock seal and demolition Notice வழங்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 30.01.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 15.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை OMR ராஜீவ்காந்தி சாலை, எண் 3/185ல் அமைந்துள்ள வணிக வளாகம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட வணிக வளாகத்திற்கு வாகன நிறுத்தம் இடம் இல்லை. மேலும் வணிக வளாகத்தின் வெளியே உள்ள நடைபாதையிலேயே வியாபாரிகள் தங்களது கடையை நீட்டித்து வியாபாரம் செய்து வருகின்றனர். மேற்கண்ட அனுமதியில்லா கட்டடம் குறித்து 2018–ம் ஆண்டு முதல் மண்டல அலுவலர்களிடம் புகார் மனுக்கள் அளித்தும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்கள் கோரியும், எத்தகைய தகவல்களையும் மாநகராட்சி அலுவலர்கள் அளிக்கவில்லை.

எனவே, மேற்கண்ட முகவரியில் எவ்வித ஒப்புதலும் இல்லாமல் கட்டப்பட்டுள்ள வணிக வாளகத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் 15.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண் 3/185 ராஜிவ்காந்தி சாலை, மேட்டுக்குப்பம், சென்னை 97 என்கின்ற முகவரியில் அமைந்துள்ள கட்டடம் 10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடமாகும். இக்கட்டடம் மாநகராட்சியிடமிருந்து எவ்வித ஒப்புதலும் பெறாமல் கட்டப்பட்டுள்ளது. மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி மேற்கண்ட கட்டடத்தின் உரிமையாளருக்கு Notice Calling for approved Plan தாக்கீது 13.2.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 15 நாட்கள் கால அவகாசத்தில் Lock and Seal and Demolition Notice வழங்கப்படும் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் எங்களால் அளிக்கப்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலரின் 14.2.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-15ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் மேட்டுக்குப்பம் ராஜீவ் காந்தி சாலை, (OMR) வணிகவளாகம் ஒன்று அனுமதியில்லாமலும், (OMR) இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது எனவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், எனவே, தன் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டடம், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்புதல் இல்லாமல் 10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் மண்டலம்-15ன் மண்டல அலுவலரின் அறிக்கை வாயிலாக அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும், 13.2.2023 அன்று கட்டட உரிமையாளருக்கு Notice Calling for approved plan தாக்கீது வழங்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

3. மனுதாரர் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட கட்டடம் ஒப்புதல் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்தும், இம்முறைமன்றம் மனுதாரரின் மனுவின் மீது விசாரணைக்கு உத்தரவிட்ட பின்பே, 13.2.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ன் அலுவலர்கள் தாக்கீது வழங்கியது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஆரம்ப நிலையிலேயே அம்மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து இருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை பெருநகர சென்னை மாநகராட்சி தவிர்க்கலாம் என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டும் மற்றும்

பிரிவு "2 (8)"Maladministration " means an action taken or purported to have been taken in the exercise of administrative function in any case-

(i) where such action, administrative procedure or practice governing such action is unreasonable, unjust, oppressive, discriminatory or nepotic and will make illegitimate gain or loss or will deny deserving benefits or

(ii) Where there is wilful negligence or delay in taking such action, or the administrative procedure or method regulating such action will cause undue delay and includes the action leading to loss or waste, or misuse of fund by malfeasance or misfeasance;

பிரிவு 7 (c) : Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

ஆகிய பிரிவுகளின்படியும், இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது,

மனுதாரர் 2018ஆம் ஆண்டு முதல் மேற்குறிப்பிட்ட வணிக கட்டடம் குறித்து மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ன் அலுவலர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், இம்முறைமன்றம் மனுதாராரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட பின்பு, 13.2.2023 அன்று கட்டடத்தின் உரிமையாளருக்கு Notice வழங்கப்பட்டுள்ளதற்கு, மண்டலம்-15ன் முன்னாள் மற்றும் இந்நாள் உதவி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை, செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் எல்லா மண்டலங்களிலும், விதிமீறல் மற்றும் அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டடங்களை கள அலுவலர்கள் ஆரம்பத்திலேயே கவனம் செலுத்தாமல் இருப்பது தெரியவருகிறது. இது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் கவனத்திற்கு இம்முறைமன்றம் கொண்டு வர விரும்புகிறது. மேலும் மேற்கண்ட அனுமதியில்லா கட்டடத்திற்கு 13.2.2023 அன்று வழங்கப்பட்ட தாக்கீது தொடர்ந்து 15 நாட்கள் கால அவகாசத்தில் Lock and Seal and Demolition Notice வழங்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு இந்நேர்வு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையினை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

This is a clear and unambiguous omission of the Greater Chennai Corporation Zone 15 besides exposing the Collusion, Complicity and connivance of the Officials concerned as far as a violation of this kind is taken cognizance of that dates back to 10 years in the calendar even as per the statement of the respondents who appeared for the hearing. The Forum expresses its deep shock over the deliberate inaction on the part of the delinquent field officials who remained just indifferent, slack and inert. The Forum directs the Greater Chennai Corporation Commissioner to initiate and complete the penal action against the commercial building owner as per the Town and Country Planning Act and as adopted by the Greater Chennai Corporation Act and Rules governing Building Plan approval in the Chennai

Metropolitan Area within the stipulated time. Severe disciplinary action should be launched against all the officials involved in this delay, dereliction of duties and downright negligence to discharge their bounden responsibilities. The Forum records its censure on the absolute absence of supervision over review of Building Violations in the Zone by the successive Assistant Commissioners till the present incumbent. The Government in MAWS Department is marked with a copy of this order for information and necessary directions to the Chennai Corporation to carryout the drive of taking action against all unauthorized constructions in its jurisdiction then and there without waiting for petitions of this nature and orders from fora like this one.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. S. சத்தியநாராயணன்,
எண்.3/752, பிள்ளையார் கோயில் தெரு,
மேட்டுக்குப்பம், (OMR), சென்னை – 600 097.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. துணை ஆணையர், (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*
5. துணை ஆணையர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, இராஜீவ்காந்தி சாலை (OMR),
சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.
6. உதவி ஆணையர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
120, இராஜீவ்காந்தி சாலை (OMR),
சோழிங்கநல்லூர், சென்னை – 600 119.
7. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்